**செய்தி வெளியீடு எண்: 104** **நாள்: 05.02.2020**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு வரலாற்றில் எக்காலத்திலும் இதுவரையில்லாத அளவிற்கு தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடும் தமிழறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற விருதுகளும் பரிசுப் பாராட்டுச் சான்றுகளும், நலத்திட்டங்களும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்தம் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி 2019 – 2020–ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானிய கோரிக்கை 46–இன்போது மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் தமிழ் மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டு வரும் நாளிதழ், வார இதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் இதழைத் தெரிவு செய்து "தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார்" அவர்களின் பெயரில் ஆண்டுதோறும் மூன்று விருதுகள் வழங்கப்படும். இவ்விருது ஒவ்வொன்றிற்கும் விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், கேடயம், பாராட்டிதழ் மற்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும் என அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பிற்கிணங்க 2020ஆம் ஆண்டு முதல் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதாக வழங்கப்படவுள்ளது. இவ்விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைத்தளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிப்பவர்கள் நாளிதழ், வார இதழ், திங்களிதழ், தொடங்கிய ஆண்டு, ஆற்றிய பணிகள், செய்த சாதனைகள், தற்போது ஆற்றிவரும் பணிகள், ஏற்கெனவே பெற்ற பாராட்டு விவரங்கள், ஆகியவற்றைத் தொகுத்து முழு விவரங்களுடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 29.02.2020ஆம் நாளுக்குள் கிடைக்கும் வகையில் அனுப்ப வேண்டும்.

முகவரி

தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.
தொ.பே.எண்.044 28190412
04428190413
மின்னஞ்சல் முகவரி: tamilvalarchithurai@gmail.com

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**